1972 சனவரி 29]

(அ) வாலாஜா நகரசபைப் பள்ளிகளை அரசு எடுத்து நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) வாலாஜா நகராட்சி நடத்தும் உயர்நிலைப்பள்ளியை அடுத்த நிதி ஆண்டில் அரசு ஏற்றுக்கொள்ளும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்வதற்கு முன்பே, இப்போதே அங்கு பணப் பற்றுக் குறை இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை அரசு அடுத்த ஆண்டு எடுத்து நடத்துவதாக இருந்தாலும், இந்த ஆண்டு பண உதவியை அரசு நீட்டிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது இந்த ஆண்டு மட்டுமல்ல; சென்ற சில பல ஆண்டுகளாகவே பற்றுக்குறை இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளை நடத்துவதில் அந்த நகராட்சி எவ்வளவோ முயற்சி செய்தும், பணப் பற்றுக் குறை தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை அடுத்த ஆண்டிலிருந்து அரசே ஏற்று நடத்துவது என்ற முடிவு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

* 117 வினு.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் உள்ள நகரசபைக்குச் சொந்த மான ஆரம்ப, உயர்நிலைப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு சென்ற மே, ஜூன் மாதச்சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை.

(இ) ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு மே மாதச் சம்பளம் 19—6—1971-ல் கொடுக்கப்பட்டது. ஜூலை மாத இறுதியில் மூன்று மாதச் சம்பளம் கிடைக்கப்பெறவில்லை என உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்ததன் பேரில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர், வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளரை நேரில் சந்தித்துப் பேசி பணப்பற்றுக்குறையினை நீக்க அரசு மானியம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு (ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் ஜூன். ஜூலை மாதங்களுக்கான சம்பளமும் உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களின் மே, ஜூன், ஜூலை மாதச் சம்பளமும் 6—8—1971 அன்று வழங்கப்பட்டன.

திரு. கே. ஏ. வகாப் : இந்த நகராட்சியினுடைய வருவாயும், பொருளாதார நிலையும் மிகவும் குறைந்திருக்கிற காரணத்தினுல் அரசு கொடுத்து வருகிற உதவிகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இனிமேலும் ஆசிரியர்கள் துன்பதத்திற்கு உள்ளாகாதிருக்க முதல் தேதியே சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தணிக்கையைப் பார்த்து அவர்களுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று இருந்தாலும் அங்குள்ள நிதி நெருக்கடியை ஆலோசித்து அவர்களுக்கு முன்பணமாகவே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அந்த நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான உயர்நிலைப்பள்ளியை அடுத்த ஆண்டு அரசே எடுத்துக் கொள்ள இருப்பதால், அதற்குப் பிறகு ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை அதற்கு அதிகச் சங்கடங்கள் இருக்காது என்று கருதப்படுகிறது. ஆசிரியர்களுக்குத் துன்பம் ஏற்படாத அளவில் தான் அவர்களுக்குச் சம்பளம் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதாக அரசு வற்புறுத்தி வருகிறது.

அனந்தலிலுள்ள பள்ளிக் கட்டடம்

* 118 வினு.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா ஊராட்சி ஒன்றியம், அனந்தல் கிராமத்தில் ஆரம்ப துவக்கப்பள்ளி ஒன்று புதியதாக கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் திறப்பு விழா செய்தும் பள்ளி நடத்தப் படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசு அங்கீகாரமில்லாத ஊராட்சி ஒன்றிய ஆரம்ப துவக்கப் பள்ளி ஒன்று அனந்தல் கிராமத்தில் புதிய கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : 'அரசு அங்கீகாரம் பெருத பள்ளி' என்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். நல்ல கட்டடத்தில் இந்தப் பள்ளிக்கூடம் அமைந்தும்கூட, அந்த ஊரிலேயே உள்ள தனியார் பள்ளி நிர்வாகியின் செல்வாக்கினுல்தான் இந்தப் பள்ளிக்கு இன்னும் அங்கிகாரம் அளிக்கப்படவில்லை என்பதை அரசு உணர்ந்து, உடனடியாக இந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு குளத்தூரில் ஒரு ஆரம்பப் பள்ளியைத் துவக்குவதற்குத்தான் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அனந்தல் கிராமத்தில் ஏற்கனவே பல ஆண்டுகாலமாக ஒரு தனியார் பள்ளி